# இடர் முகாமைத்துவ நிலையம்

# வருடாந்த அறிக்கையும்
# வருடாந்தக் கணக்கறிக்கையும்

# 2006

# <u>உள்ளடக்கம்</u>


| | | | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| பிரிவு 1 | அறிமுகம் | | 5 |
| பிரிவு 2 | 2.1 | இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் தொடர்பான சிறுகுறிப்பு | 6 - 7 |
| | 2.2 | இடர் முகாமைத்துவ நிலையத்தின் தேசிய மன்றம் | 8 |
| பிரிவு 3 | பணிப்பாளர் நாயகத்தின் முன்னேற்ற அறிக்கை | | 9 - 17 |
| பிரிவு 4 | பாகங்கள் | | |
| | 4. முன்னாயத்தத் திட்டமிடல் | | 18 - 19 |
| | 5. அவசரகால நடவடிக்கை நிலையம் | | 20 - 21 |
| | 6. பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான அறிவூட்டல் | | 22 - 23 |
| | 7. இடர் குறைப்புத் தொழிநுட்பம் | | 24 - 27 |
| பிரவு 5 | கணக்கறிக்கை | | 28 - 40 |
| | 8. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | | 41 - 46 |


............

பிரிவு 1

# அறிமுகம்

2005 ஜீலை மாதம் 13ம் திகதியில் அமுலுக்கு வந்த, 2005ம் ஆண்டின் 13ம் இலக்க பேரழிவுச் செயலாட்சிச் சட்டம் நாட்டில் இடர் முகாமைத்துவத்திற்கான சட்டரீதியான கட்டமைப்பை வழங்குகின்றது. இடர் முகாமத்துவத்திற்கான தேசிய மன்றம் உயர் மட்ட அமைச்சர்களை உள்ளடக்கியுள்ளது. அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இதன் தலைவராகவும் கௌரவ பிரதம மந்திரி அவர்கள் இதன் உப தலைவராகவும் செயலாற்றுகின்றார்கள். தெரிவு செய்யப்பட்ட 20 அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சர்களும், மாகாணசபைகளின் பிரதம அமைச்சர்கள், எதிர்கட்சியின் ஐந்து அங்கத்தவர்கள் இதன் ஏனைய உருப்பினர்களாக இருப்பார்கள். இயற்கை மற்றும் ஏனைய அனர்த்தங்களுக்கான திட்டமிடல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பான பிரதான நிலையமான, இடர் முகாமைத்துவத் தேசிய மன்றத்தின் கீழ் செயற்படும் இடர் முகாமைத்துவ நிலையத்தை உருவாக்குவதற்கும் இச்சட்டம் காரணியாய் அமைந்தது. மேற்குறிப்பிட்ட சட்ட மூலத்திற்கமைய இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதான செயற்பாடுகளாவன. ( i) தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை மற்றும் தேசிய அவசரகால நடவடிக்கை திட்டத்தை தயாரிப்பதற்கும், தேவையான போது அவற்றை புதுப்பிப்பதற்கும் தேசிய மன்றத்திற்கு உதவியளித்தல். (ii) தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை மற்றும் தேசிய அவசரகால நடவடிக்கை திட்டத்தை அமுல்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்று செயற்படல், இடரொன்றிற்கான அவசர நிலைமை அமுல்படுத்தப்படும் போது தேசிய அவசரகால நடவடிக்கை திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வழிநடாத்தல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்தல். (iii) அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்றவிதத்தில் அமைவதை உறுதிப்படுத்தல். (iv) பிரிவு 10 ற்கமைய உருவாக்கப்பட்ட, அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் மட்டத்திலான பல்வேறு அனர்த்த முகாமைத்துவ திட்டங்களினடிப்படையில், இடர் முன்னாயத்தம், இடர் குறைப்பு, இடர் தடுப்பு, நிவாரணம், புனர்வாழ்வு மறறும் புனர்நிர்மாணத் திட்டங்களை உருவாக்குதலும் அமுல்படுத்துதலும். இவ்வாறான நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் அமுல்படுத்தும் நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தலும், இப்படியான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவசியமான நிதியை திரைசேரியிலிருந்து பெற்று அவற்றை உரிய பகுதிகளுக்கு வழங்கி அதனை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல், (v) உரிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான

ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதலும், இந்நிறுவனங்களுடனும் செயலகங்களுடனும் இப்படியான இடர் முகாமைத்துவ வேலைகளை துவங்குதலும் நடைமுறைப்படுத்தலும். (vi) இடர் முகாமைத்துவம் தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் இடர் முகாமைத்துவம் தொடர்பான தகவல்களை சேகரித்துப் பராமரித்தல். (vii) தமது செயற்பாடுகள் தொடர்பாக தேசிய மன்றத்தினால் வேண்டப்படுமிடத்து காலத்திற்குக் காலம் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

இடர் முகாமைத்துவம் என்பது பரந்ததொரு விடயப்பரப்பாக அமைவதால், இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தில் எல்லா மாகாண ஆளுனர்களும் அங்கத்தவர்களாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை 13ம் இலக்க திருத்தச் சட்ட மூலத்திற்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கையில் இடர் அபாய முகாமைத்துவத்திற்கான கட்டமைப்பை இச்சட்ட மூலம் வழங்குவதோடு, இடர் முகாமைத்துவத்தை பலகோணங்களில் நோக்குவதனால் நிவாரணம் வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து, இடர் முகாமைத்துவத்திற்கான முன்னரே நடவடிக்கை எடுக்கும் அனுகுமுறைக்கான கொள்கை மாற்றத்தை ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.

சட்ட மூலத்திற்கமைய, இடர் முகாமைத்துவத்தில் பின்வரும் இடரபாயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

- வெள்ளப்பெருக்கு
- மண்சரிவு
- தொழிற்சாலை இடரபாயங்கள்
- சுனாமி (ஆழிப்பேரலை)
- நில நடுக்கம்
- ஆகாய இடரபாயங்கள்
- தீ
- தொற்றுக்கள்
- வெடிப்புக்கள்
- ஆகாயத் தாக்குதல்கள்
- சிவில் மற்றும் உள்ளூர் கலவரங்கள்
- இரசாயன விபத்துக்கள்

- கதிர்வீச்சு அபாய நிலைமைகள்
- எண்ணெய் கசிவுகள்
- அணு இடர்கள்
- நகர மற்றும் காட்டுத் தீ
- கடலரிப்பு
- சுழற்காற்று (டோர்னார்டோ), மின்னல் தாக்கம், மற்றும் கடுமையான இடி

மே. தகு ஜனாதிபதி அவர்களின் கீழ் இயங்கிய இடர் முகாமைத்தவத்திற்கான தேசிய மன்றத்தின் கீழ் 2005 ஆகஸ்ட் மாதத்தில் இடர் முகாமைத்துவ நிலையம் உருவாக்கப்பட்டது.

இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் முதலாவது கூட்டம் 2005 ஒக்தோபர் மாதம் 12ம் திகதி இடம்பெற்ற போது, இடர் முகாமைத்துவ நிலையத்தை ஆரம்பிப்தற்கான அனுமதி, நிலையத்தின் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவ நிலையத்தின் உடனடி செயற்பாட்டிற்காக பணிப்பாளர் நாயகத்தையும், ஏனைய ஊழியர்களையும் பதவியமர்த்தல், அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், 2005ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, 2006ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவ நிலையத்தின் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம், ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான 2006ம் ஆண்டிற்கான செயற்திட்டம் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2005 டிசம்பர் மாதத்தில் இடர் முகாமைத்துவத்திற்கென தனியான அமைச்சொன்று கௌரவ பிரதம மந்திரி அவர்களின் கீழ் உருவாக்கப்பட்டது. 2005 பெப்ரவரி மாதத்தில், மனித உரிமையையும் தனது விடயப்பரப்பில் உள்ளடக்கிய இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு உருவாக்கப்பட்டது. பெப்ரவரி 2006 ல் வெளியிடப்பட்ட வர்த்தமாணி அறிவித்தலின் படி இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றம், இடர் முகாமைத்தவ நிலையம், காலநிலை அவதானிப்பு திணைக்களம் என்பன இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. வர்த்தமானி அறிவித்தலின் படி இடர் முகாமைத்துவ நிலையத்தின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் பின்வருவனவாகும்.

1. இடர் குறைப்பு, பதில்நடவடிக்கை மற்றும் மீள் நிர்மாணம் என்பவற்றிற்கான வெளிநாட்டு நிதியினால் செயற்படும் திட்டங்களை ஆரம்பித்தலும் அவற்றை ஒருங்கிணைப்புச் செய்தலும்.

2. அவசியமான கடமைகளை மேற்கொள்வதற்காக, அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள். சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய தகுதியான நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணுதல்.
3. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
4. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் தொடரபான அறிவூட்டற் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்
5. முன்னறிவிப்புத் தொகுதி
6. இடர் முகாமைத்துவம், நிவாரண உதவிகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்கயையும் சமூக நலன்புரி நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.
7. இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்கயையும் சமூக நலன்புரி நிறுவனங்களையும் வழிநடாத்துதல் மற்றும் அவற்றிற்கு உதவியளித்தல்.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஆரம்பிப்புடன், சுனாமி பாதிப்புக்குள்ளான 9 மாவட்டங்களில் கரையோர மக்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளர், உதவி இணைப்பாளர் மற்றும் சராசரியாக 20 இடர் முகாமைத்துவ உதவியாளர்களுடன், மாவட்ட செயலாளருக்கு பொறுப்புக் கூறும் விதத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இடர் முகாமைத்துவம் தொடர்பான குறுகிய பயிற்சியொன்றின் பின்னர் முப்படைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை என்பவற்றிலிருந்து விடுவிக்கப்பட்ட அதிகாரிளினாலும் ஏனைய தர உத்தியோகத்தினரினாலம் இதற்கான வெற்றிடங்கள் நிறப்பப்பட்டன.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்தற்காக அதன் பிரதான பிரிவுகளான இடர் குறைப்பு மற்றும் தொழிநுட்பம், அவசரகால நடவடிக்கைகள், பயிற்சி மற்றும் அறிவூட்டல், முன்னாயத்தம் மற்றும் பதில் நடவடிக்கை திட்டமிடல், முன்னறிவிப்பு மற்றும் பரிாளனம் மற்றும் நிதி போன்றவற்றிற்கான வெற்றிடங்களை நிறப்புவது அவசியமாயிற்று. உப தேசிய மட்டத்தில் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யும் மற்றும் அமுல்படுத்தும் நிலையமாக மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகள் செயற்படலாயிற்று. இடர் முகாமைத்துவ நிலையத்திற்கான ஊழியர்களின் உள்வாங்கலுடன் படிப்படியாக 22 மாவட்டங்களிலும் இடர் முகாமைத்துவ பிரிவுகளை ஆரம்பிப்பது சாத்தியமாயிற்று.

ஒருவருடகால வளர்ச்சியில், இடர் முகாமைத்து நடவடிக்கைகளில் அதன் கடுமையான பங்களிப்பை இடர் முகாமைத்துவ நிலையம் வழங்கியதன் மூலம் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தனது வெளிப்பாட்டை காண்பித்து நிற்கின்றது.

**தூர நோக்கு**

இலங்கையில் பாதுகாப்பான சமூகங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி

**பணி**

இயற்கை, தொழிநுட்ப மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்த அபாயங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம், சமூகங்களிடையேயும், மொத்தமாக தேசிய மட்டத்திலும் பாதுகாப்புக் கலாசாரத்தை உருவாக்குதலும்

பிரிவு 2

## 2. இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் தொடர்பான சுருக்கமான விளக்கம்

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | மேஜர் ஜெனரால் காமினி ஹெட்டியாரச்சி<br>*எம் எஸ் சி ஆங்கிலம் மற்றும் முகாமைத்துவம் (சபரகமுவ)*<br>*மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (என் ஐ பி எம்)* |
| பணிபாளர்<br>(இடர் குறைப்பு மற்றும் தொழிநுட்பம்) | திரு. யு டப்லிவ் எல் சந்ரதாச<br>*எம் எஸ் சி பொறியியல் ( (மாஸ்கவ்)*<br>*நீர் விநயோகம் மற்றும் கழிவு நீர் சுத்தகரிப்பு தொடர்பான டிப்ளோமா மிட்ல்செக்ஸ் பொலி டெக்னிக் (யுகே)* |
| பணிப்பாளர் (முன்னாயத்த திட்டமிடல்) | திருமதி லலனி இம்புலான<br>*பி எஸ் சி பொறியியல்– மொரட்டுவை*<br>*எம் எஸ் சி பொறியியல் ( நீர் வள முகாமைத்துவம்)* |
| பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான அறிவூட்டல்) | கலாநிதி புத்தி வீரசிங்ஹ<br>*பி எஸ் சி விஞ்ஞானம் (கௌரவ). (பேராதனை)*<br>*பி எச் டி (வோல்ஸ்)*<br>*வியாபாரம் மற்றும் நிதி நிர்வாகத்திற் பட்டப்பின் படிப்பு (நெதர்லாந்து மற்றும் இலங்கை)* |
| பதில் பணிப்பாளர்<br>(தனிநபர் மற்றும் நிர்வாகம்) | திரு என் டப்லிவ் எஸ் எடப்லிவ் டி சில்வா<br>*பி ஏ விட்யோட் (சிலோன்)*<br>*சேர்ட் கீப் மென்செஸ்டர் - யு கே*<br>*முகாமைத்துவத்திற் பட்டப் பின் படிப்பு – டெல்ப்ட் நெதர்லாந்து*<br>*எம் ஏ – பொது நிர்வாகம் ஸ்ரீ ஜயவர்தனபுர*<br>*எல் எல் பி (மட்டம் 3)- திறந்த பல்கலைக்கழகம் இலங்கை* |
| பதில் பணிப்பாளர்<br>(அவசரகால நடவடிக்கைகள்) | திரு ஏ டி ரம்யா சிரிவன்ச<br>பி ஏ (களனி)<br>*எம் ஏ- உணவு மற்றும் போசாக்கு தொடர்பான தொழில்சார் கல்வி (பிலிப்பைன்)*<br>*கொள்வனவு மற்றும் பொருள் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா*<br>*மாகாண நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு* |
| பதில் பணிப்பாளர் (நிதி) | திருமதி பி ஏ எம் பொதேஜு<br>*பி ஏ பேராதனை*<br>*சிமா அங்கத்தவர்* |

| | |
|---|---|
| பதில் பணிப்பாளர் (தொடர்புசாதனங்கள்) | திரு. டப்லிவ் ஏ எஸ் லால் குமார |
| உதவிப் பணிப்பாளர்<br>(அவசரகால நடவடிக்கைகள்) | விங்கொமாண்டர் எஸ் எம் டி விஜேயசூரிய |
| உதவிப் பணிப்பாளர்<br>(தகவல் தொழிநுட்பம்) | திரு. எஸ் ஏ கே என் ஜயசோம<br>*பி எஸ் சி பிரயோக விஞ்ஞானம்*<br>*கணனி தொழிநுட்பத்தில் டிப்ளோமா* |
| உதவிப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான அறிவூட்டல்) | திரு கே பி ஏ தர்மரத்ன<br>*பி கொம் (விசேட) பேராதனை- இலங்கை*<br>*சமூக அபிவிருத்தி தொடர்பான பட்டப் பின் படிப்பு* |
| உதவிப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான அறிவூட்டல்) | திரு என் டப்லிவ் ஏ எம் எம் கே என் பண்டார<br>*பி எஸ் சி புவியியல் பேராதனை- இலங்கை*<br>*எம் எஸ் சி பொறியியல் மற்றும் பிரயோக புவியியல். – தாய்லாந்து* |

## 3.1 இடர் முகாமைத்துவ நிலையத்தின் தேசிய மன்றம்

| | |
|---|---|
| தலைவர் | அதி மே தகு ஜனாதிபதி, மஹிந்த ராஜபக்ச அவர்கள் |
| உப தலைவர் | கௌரவ பிரதம மந்திரி, இரத்னசிரி விக்ரமநாயக அவர்கள் |
| எதிர்க் கட்சித் தலைவர் | கௌரவ ரணில் விக்ரமசிங்ஹ அவர்கள் |

**பின்வரும் பிடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள்**

| | |
|---|---|
| சமூக நலனோம்பு | கௌரவ அமைச்சர் டக்லஸ் தேவானந்தா அவர்கள் |
| புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு | |
| சுற்றாடல் | கௌரவ அமைச்சர் மைத்திரிபால சிரிசேன அவர்கள் |
| வீட்டு விடயங்கள் | கௌரவ அமைச்சர் சந்திரசிரி கஜதீர அவர்கள் |
| சுகாதாரம் | கௌரவ அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா அவர்கள் |
| விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | கௌரவ அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்கள் |
| வீடமைப்பு | கௌரவ அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்கள் |
| கடலோர பாதுகாப்பு | |
| நீர்ப்பாசனம் | கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் |
| மின் வலு | கொளரவ அமைச்சர் டப்லிவ் டி ஜே செனவிரத்ன அவர்கள் |
| பாதுகாப்பு | அதி மே தகு ஜனாதிபதி அவர்கள் |
| பொலிஸ் | அதி மே தகு ஜனாதிபதி அவர்கள் |
| நிதி | அதி மே தகு ஜனாதிபதி அவர்கள் |
| காணி | |
| மீன்பிடி மற்றும் கடல்வளம் | கௌரவ அமைச்சர் பீ(f)லிக்ஸ் பெரேரா அவர்கள் |
| வெளிவிவகாரம் | கௌரவ அமைச்சர் அவர்கள் |
| நீர் விநியோகம் | கௌரவ அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்கள் |
| பெருந்தெருக்கள் | கௌரவ அமைச்சர் ஜயராஜ் பெர்னாண்டோபுள்ளே அவர்கள் |
| நகர அபிவிருத்தி | கௌரவ அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்கள் |
| கல்வி | கௌரவ அமைச்சர் சுசில் பிரேம்ஜயன்தா அவர்கள் |

பிரவு 3

## 3. பணிப்பாளர் நாயகத்தின் முன்னேற்ற அறிக்கை

2005ம் ஆண்டு 13ம் இலக்க பேரழிவு செயலாட்சிச் சட்டத்திற்கமைய உருவாக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றம் தெடர்ச்சியான நிலைப்பாடொன்றையும் பொது முத்திரையையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

### தேசிய மன்றத்தின் உள்ளடக்கம்




2005ம் ஆண்டின் 13ம் இலக்க இலங்கை பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் பிரிவு 8ற் கமைய, இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் கீழ் இடர் முகாமைத்தவ நிலையம் உருவாக்கப்பட்டு 2005 ஆகஸ்ட் 1ம் திகதி பணியை ஆரம்பித்தது.

### 3.2 <u>இடர் முகாமைத்துவ நிலையத்தின் கட்டமைப்பு</u>



## 3.3 ஊழியர்களை சேர்த்துக்கொள்ளல்

இடர் முகாமைத்தவ நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உபதேசகர்களின் உதவியுடன் ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டம், வெற்றிடங்கள், சம்பளம் மற்றம் நிறுவனக் கட்டமைப்பு என்பன உருவாக்கப்பட்டது.

2005.09.14 ல் கூடிய கெபிணற் அமைச்சர்களின் கூட்டத்தில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் நிறுவன கட்டமைப்பும் வெற்றிடங்களும், இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் பிந்திய அனுமதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2005.10.12 ல் நடைபெற்ற தேசிய மன்றக் கூட்டத்தில் மேற்படி தீர்மானமும் உரிய அதிகார நிறுவனங்களினால் அனுமதியளிக்கும் வரை சம்பள அளவுகளும் அனுமதிக்கப்பட்டது.

சில மாற்றங்களுடன், இடர் முகாமைத்துவத்திற்கான வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினாலும், அதன் சம்பள அளவுகள் நிர்வாக சேவைகளுக்கான தேசிய மன்றத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில், 2006ம் ஆண்டில் அதன் 70 வீதமான வெற்றிடங்களை நிறப்புவதில் இடர் முகாமைத்துவம் வெற்றி கண்டது. தகுதியானவர்களின் பற்றாக்குறை, பதவியை ஏற்றுக்கொள்வதற்கு சேவை செய்வோரை சேவையில் இருந்து விடுவிக்காமை மற்றும் சேவையை ஏற்றுக்கொள்வதற்கு முன்வராமை, ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்கும் வாய்ப்புள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் தொழிலின் ஸ்திரத் தன்மையில் காணப்பட்ட நம்பிக்கையின்மை, பொது நிர்வாக சேவையில் ஏற்பட்ட சம்பள உயர்வு, போக்குவரத்து வசதிகள், விடுமுறை கொடுப்பனவுகள் போன்ற ஏனைய வசதிகளில்லாமல், தற்போதைய குறித்த தொகை சம்பளத்துடன் அனுபவமுள்ள ஊழியர்களை சேர்த்துக்கொள்வதிற் காணப்பட்ட கடினத்தன்மை, இடர் முகாமைத்துவ நிலையத்தின் சட்ட ரீதியிலான நிலைமை, அந்த நேரத்திற் பதிவு செய்யப்பட்ட பட்டியலை வெற்றிடங்களை நிறப்புவதற்கு மீண்டும் கருத்திற் கொள்ளாமை, தெரிவு செய்யப்பட்டவர்களை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம் என்பனவற்றினால் இப்பதவிகளுக்காக மீண்டும் மீண்டும் விண்ணப்பங்கோர வேண்டி ஏற்பட்டது.

ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்ட அனுபவம் வாய்ந்த அதிகாரிகளின் உதவியுன் இடர் முகாமைத்துவ நிலையத்தில், முன்னாயத்தத் திட்டமிடல், பயிற்சி மற்றும் பொது மக்களுக்கான அறிவூட்டல், இடர் குறைப்பு மற்றும் தொழிநுட்பம், அவசரகால நடவடிக்கை, நிர்வாகம், நிதி மற்றும் தொடர்பாடல் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

## 3.4 மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவை உருவாக்குதல்

ஆரம்பத்தில், ஒன்பது மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகளை கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்றை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உருவாக்கப்பட்டது. இதற்காக இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் அதிரடிப்படை அதிகாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்பிரிவிற்காக இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய தர உத்தியோகத்தினர் 222 பேர் வெளிவிடப்பட்டுள்ளதோடு சிரேஷ்ட அதிகாரிகள் மாவட்ட இணைப்பாளர்களாகவும் இடர் முகாமைத்துவத்தில் அவர்களுக்கு உதவியளிப்பதற்கு, கனிஷ்ட அதிகாரிகள் 15 பேர் அவரின் உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

12 மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளர்கள் மற்றும் 80 உதவி இணைப்பாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், மொணராகலை, மட்டக்களப்பு, குருணாகலை, கண்டி, மாத்தளை, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய 12 மாவட்டங்களில் குறிப்பிட்ட வசதிகளுடன் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகளை அமைப்பதற்கான நடவடிக்கையை இடர் முகாமைத்துவ நிலையம் மேற்கொண்டுள்ளது. சேர்த்துக்கொள்ளப்பட்ட அதிகாரிகள், தற்போது செயற்பாட்டிலுள்ள மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்புப் பிரிவுகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட பின்னர் மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

### மாவட்ட நிறுவனத்தின் கட்டமைப்பு



## 3.4 இடர் முகாமைத்தவ நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட, நடைமுறையிலுள்ள செயற்பாடுகள்

**தேசிய மட்டத்தில்.**

- பாதுகாப்பான இலங்கையொன்றை நோக்கிய இடர் முகாமைத்துவம் தொடர்பான 2005 முதல் 2015 வரையிலான பத்து வருட திட்டமொன்று உருவாக்கப்பட்டது. Roadmap for a safer Sri Lanka ல் குறுகிய கால மற்றும் நீண்ட கால செயற்திட்டங்கள் 100 அளவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- இலங்கையில் இடர்முகாமைத்தவம் தொடர்பான தேசிய கொள்கையொன்றை உருவாக்கப்பட்டுள்ளது.
- தேசிய தொழிநுட்ப ஆலோசனை கமிட்டி, கொழும்பு வெள்ள கமிட்டி, DVI தொடர்பான தொழிநுட்ப கமிட்டி, அனர்த்த அபாயமுள்ள இடங்களுக்கான கட்டட நிர்மான வழிகாட்டியை விருத்தி செய்வதற்கான தொழிநுட்பக் கமிட்டி என்பன உருவாக்கப்பட்டுள்ளன.
- தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்திற்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
- தகவல்களை பரிமாரிக்கொள்வதற்கான DMC இணையத்தளம் (www.dmc.gov.lk) மற்றும் செய்திமடல் வெளியீடு.
- LIDAR SURVEY – இத்தாலி அரசின் அனுசரணையுடன் நிறைவு செய்யப்பட்டது. இதனை கையளிக்கும் நிகழ்வு 2006 டிசம்பர் 07ம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான நிதி இத்தாலிய அரசின் வெளி உரிமைகள் நிதியாக வழங்கப்பட்டது.
- கௌரவ பிரதம மந்திரி மற்றம் கௌரவ இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மற்றும் ஏனைய கௌரவ பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன், தேசிய இடர் பாதுகாப்பு தினம் 2006 டிசம்பர் 26ல் காலியில் இடம்பெற்றது.
- தேசிய இடர் பாதுகாப்பு தினத்தை ஒட்டி இலத்திரனியல் மற்றும் பத்திரிகை தொடர்புசாதனத்தின் ஊடான பரந்தளவிலான விரிவாக்கற் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 30 வருடங்களுக்கான இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான வரலாற்று தகவல்கள் திரட்டுமபணி ஆரம்பிக்கப்பட்டது (DESINVENTAR)
- இலங்கையில் இடர் வளஙகள் வலையமைப்பு உருவாக்கப்பட்டது. (SLDRN)
- பிரதான பங்காளர் நிறுவனங்கள் சிலவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.
  - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
  - இலங்கை சமுர்த்தி அதிகார சபை மற்றும் சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம்
  - பிரக்டிகல் எக்சன் நிறுவனம் (Practical Action)
  - டயலொக் ஜி எஸ் எம் (Dialog GSM)
- SMS மற்றும் Cell Broadcast System ஆரம்பிக்கப்பட்து. 2 X குழு அடிப்படையில் டயலொக் இன் மாதிரித் திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- UNESCAP உடன் இணைந்து சுனாமி முன்னறிவித்தற் கம்பங்கள் 3 உருவாக்கப்பட்டன.
- இலங்கையில் ICS (நிகழ்வு கட்டளை முறை) ஆரம்பிக்கப்படடது. ஐக்கிய இராச்சியத்தின் Forest Services இனால் பயிற்சிப்பட்டறைகள் சில நடாத்தப்பட்டன. இது Indian Ocean Tsunami Early Warning System ன் கீழ் USAID அனுசரணையில் இடம்பொற்றது.

- புத்தளம், கம்பஹா, கொழும்பு மற்றும் கழுத்துறை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது தேசிய அவசரகால இணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- 2006 ஒக்தோபரில் இடம்பெற்ற வெள்ளப்பாதிப்புக்கள் தொடர்பாக இணைந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.
- கட்டுமரங்கள் மற்றும் தோணிகளை உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கியத் மூலம் வெள்ளப்பெருக்கிற்கு அவற்றினால் முகங்கொடுப்பதற்கான ஆற்றல் விருத்தி செய்யப்பட்டது.

### 3.6 இடர் முகாமைத்துவ நிலையத்தின் பங்காளிகள்




### 3.7 <u>உள்ளூர் மட்ட செயற்பாடுகள்</u>

புத்தளம், கம்பஹா, கொழும்பு, கழுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- மாவட்ட இடர் முகாமைத்தவ கமிட்டிகளை உருவாக்குதல்.
- பிரதேச மட்டத்தில் இடர் முகாமைத்துவ கமிட்டிகைள அமைத்தல்.
- கிராமிய மட்ட இடர் முகாமைத்துவ கமிட்டி மற்றும் துணைக்கமிட்டிகளை அமைத்தல்.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவையாளர் மட்டத்திலான இடர் முன்னாயத்தம் மற்றும் பதில் நடவடிக்கை திட்டங்கள் உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- முதலுதவி, உயிர் பாதுகாப்பு, நீச்சல், தீயணைப்பு, அவசரகால பாதுகாப்பிடங்களுக்கு கொண்டுசெல்வதற்கான பயிற்சி நடவடிக்கைகள் என்பன தொடர்பாக கிராமிய தொண்டர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சிகள்.
- அறிவூட்டல் நிகழ்வுகள்
  - பொது மக்களுக்கானது
  - பாடசாலைகள்
  - அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்
  - ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் தனியார் துறை போன்றன.
- பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுசெல்வதற்கான முன்னாயத்த மற்றும் முன்னெச்சரிக்கை நெட்டுரப் பயிற்சி நடவடிக்கைகள்.
- வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தும் விதத்திலான வாய்க்கால்களை தொடர்புபடுத்தும் நடவடிக்கை.
- முரம் நடுகை போன்ற இடர் தடுப்பு நடவடிக்கைகள்.
- சமூக மட்ட இடர் அபாய வரைபடப்படுத்தல்கள்
- அவசரகால நடவடிக்கைகளை மேற்கொள்தல்- 2006 ஒக்டோபர் மாதத்தில் காலியில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு மற்றும் வெள்ளப்பெருக்கு தொடர்பான நடவடிக்கைகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.
- கந்தளாய் மற்றும் மூதூரில் ஏற்பட்ட நிகழ்வின் பின்னர் தற்காலிகமாக இடம்பெயர்ந்தவர்களுக்கான தேவைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

## 3.8 எதிர்காலத் திட்டங்கள்

* தேசிய இடர் முகாமைத்துவம் மற்றும் தேசிய அவசரகால நடவடிக்கை திட்டங்களை தயார்செய்தல்.
* கொழும்பில் ஒரே கூரையின் கீழ் அமைந்த இடர் முகாமைத்துவ நிலையம், சுனாமி முன்னறிவிப்பு நிலையம். நானாவித அனர்த்தங்களுக்கான முன்னறிவிப்பு நிலையம், தேசிய தகவல் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு நிலையம் மற்றும் 24/7 தேசிய நடவடிக்கைகள் நிலையம்
* இந்நிலையம் மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் கிராமிய நிறுவனங்களுடன் தொடர்பு பட்டிருக்கும்.
* மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் கிராமிய நிறுவனங்களுக்குரிய

செயற்பாடுகளையும் வளங்களையும் வழங்குவதன் மூலம் இடர முகாமைத்துவ செயற்பாட்டை பன்முகப்படுத்துதல்.

* இடர் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கிராமிய குழுக்களினால் உருவாக்கப்பட்ட தொண்டர் கலாச்சாரமொன்றை உருவாக்குதல்.
* இடர் முகாமைத்துவம் தொடர்பான எல்லா செயற்பாடுகளுக்கும் அமைச்சுக்களுக் கிடையிலான, பிரிவுகளுக் கிடையிலான மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.
* இடர் முகாமைத்துவ செயற்பாடகள் தொடர்பாக அரச நிர்வாக, மாகாண சபைகள், பிரதேச நிறுவனங்கள் மற்றும் எல்லா பங்குதார நிறுவவங்களும், தனியார்துறை, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றம் மக்கள் சமூக நிறுவனங்கள் என்பவற்றை ஒருங்கிணைப்புச் செய்தல்.
* இடர் முகாமைத்துவம் தொடர்பான திட்டங்களை தர்க்க ரீதியில் மற்றும் நடைமுறைக்கு சாத்தியமான முறையில் மற்றும் வினைத்திறன் மிக்கதாக, சகல அமைச்சுக்களும், திணைக்களங்களும், மாவட்ட செயலகங்களும், மாகாண சபைகளும், பிரதேச செயலாகங்களும் மற்றும் கிராமிய தொண்டர் நிறுவனங்கள் செயற்படுத்துதல்.
* தகவல்களை வழங்குதற்காக தொடர்பு சாதன ஊடகங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல்.
* பொது மக்கள் அறிந்துகொள்வதற்கு, இடர் முகாமைத்துவ தகவல்களை வழங்குவதற்கு, அறிவூட்டல்களை மேற்கொள்வதற்கு தொடர்பு சாதனங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல்.
* பொதுமக்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறைகளில் இடர் முகாமைத்துவம் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்காக, இடர் முகாமைத்துவ நிலையம், எல்லா பங்காளர் நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
* இடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் உதவியை உச்ச அளவில் பெற்றுக்கொள்தல்.
* இடர் அபாயங்களுக்கென விசேடமான தொழிநுட்ப குழுவொன்றை உருவாக்குதல்.

### 3.9 <u>மீள் வடிவமைத்தல்</u>

இடர் முகாமைத்துவ நிலையத்தின் கடந்தகால நடவடிக்கைகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், அதன் நோக்கங்களை நிறைவு செய்வதற்காக நிறுவனத்தை மீள வடிவமைக்கும் தேவை உணரப்பட்டுள்ளது. உரிய

அதிகாரிகளின் அனுமதியுடன் 2007 ம் ஆண்டில் இதனை மேற்கொள் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**3.10 தடைகள்**

சட்ட ரீதியாக அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் குறைபாடுகளினால், இடர் முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் அதன் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தடைகளை சந்தித்துள்ளது.

**போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்கள்**

குறைந்தபட்ச தாமதத்துடன் நிகழ்வொன்றிற்கான பதில் நடவடிக்கையை மேற்கொள்வதற்று அவசியமான போக்குவரத்து வசதிகள் அவசரகால நடவடிக்கை நிலையத்திற்கு வழங்கப்படல் வேண்டும். தற்போது மாவட்ட இடர் முகாமைத்தவ இணைப்பாளர்களுக்கு தொலைபேசி மற்றும் சி டி எம் ஏ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தமது சொந்தக் கையடக்கத் தொலைபேசியையும் தொடர்பாடல்களுக்காக பயன்படுத்துகின்றார்கள். இப்படியான தடைகளை தவிர்ப்பதற்காக, இடர் முகாமைத்துவ நிலையத்தினால் சிபாரிசு செய்யப்படும் அதிகாரிகளுக்கு கையடக்கத் தொலைபேசியை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2007 ம் ஆண்டுக்கான திட்டமிடல் பட்டறையின் போது, அனர்த்த நிகழ்வொன்றின் போது பாதிக்கப்பட்ட இடங்களை துரிதமாக அடைவதற்கு, மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பு அதிகாரிகளுக்கான நாட்சக்கர வண்டிகள் வழங்கப்படுவதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

**தங்குமிட வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்**

இடர் முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலக்கம் 27 சுதந்திர சதுக்கத்திலிருந்து முதலீட்டு சபை கட்டடத்தொகுதிக்கும் (2005 செப்டம்பர் 15ம் திகதி முதல் 2006 மே 31ம் திகதி வரை) பின்னர் 2006 ஜூன் 01ம் திகதியிலிருந்து பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டப கட்டடத் தொகுதிக்கும் என 3 இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. காலநிலை திணைக்களத் தொகுதியில் பல மாடிக்கட்டடமாக இடர் முகாமைத்துவ நிலையத்தை நிர்மானிப்பதற்கான ஏற்பர்டுகள் செய்யப்பட்டன. என்றாலும், அதன் சக்திக்கு அப்பாற்பட்ட காரணிகளின் காரணமாக வேறு இடமொன்றை தேடுவதற்கான நிலைக்கு இடர் முகாமைத்துவ நிலையம் உள்ளாகியுள்ளது.

**<u>ஊழியர்களை சேர்த்துக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள்</u>**

தயவு செய்து 3.3 ஐ பார்க்கவும்

### 3.11 முடிவுரை

இடர் முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டை உறுதிப்படுத்தும் விதத்தில், சட்ட மூலத்திற் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அதன் செயற்பாடுகளில் எதிர்நோக்கப்பட்ட தடைகளை நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தற்போதைய ஊழியர்களை தக்கவைத்துக் கொள்வதற்காகவும், அனுபவம் வாயந்த ஊழியர்களை கவர்வதற்காகவும் ஊழியர்களின் சேவை நிபந்தனைகளில் மாற்றம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இடத்திற்கான பிரச்சினையை நிவர்த்தி செய்யும் விதத்தில் கட்டடமொன்றை நிர்மானித்தலும், திட்டங்களில் நன்கொடை வழங்கும் நிறுவனங்களை கவர்வதும்.

பிரிவு 4

# 4. முன்னாயத்தத் திட்டமிடற் பிரிவு – 2006 ம் ஆண்டு

## 4.1 அறிமுகம்

மாவட்ட, பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் பிரிவு மட்டத்திலான இடர் முன்னாயத்தத் திட்டங்களை தயாரிப்பதில் முன்னாயத்த திட்டமிடற் பிரவு ஈடுபட்டுள்ளது. இச் செயற்பாடுகள், இடர் முகாமைத்துவ நிலையத்தினால் மாவட்ட செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளர்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகள், கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை, அம்பாறை, புத்தளம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய ஒன்பது மாவட்டங்களில் செயற்படுகின்றன. இம்மாவட்டங்களில் மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்கான இடர் முன்னாயத்தத் திட்டங்கள் தாயாரிக்கப்பட்டுவருகின்றன.

கீழே குறிப்பிட்டுள்ள விதத்தில் முன்னாயத்த திட்டங்கள் பலபடிகளில் தயாரிக்கப்படுகின்றன.

1. அறிவூட்டல் நிகழ்ச்சி
2. இடர் முகாமைத்துவ குழுக்களை உருவாக்குதல்
3. தகவல்களை சேகரித்தலும் திட்டத்தின் வரைவைத் தயாரித்தலும்
4. திட்ட வரைவு தொடர்பான கலந்துரையாடல்கள்
5. திட்டத்தை நிறைவு செய்தலும் பதிப்பித்தலும்

## 4.2 முன்னாயத்தத் திட்டங்கள் தயார்செய்தலின் நிலைமை- டிசம்பர் 2006

| **மாவட்டம்** | **மாவட்ட திட்டம்** | **பிரதேச திட்டம்** | **கி.சே பிரிவு திட்டம்** |
|---|---|---|---|
| கொழும்பு | முன்னேற்ற நிலையில் | 13 திட்டங்கள் முன்னேற்ற நிலையில் | |
| களுத்துறை | திட்ட வரைவு தயார்நிலையில் | 4 திட்டங்கள் முன்னேற்ற நிலையில் | 20 |
| காலி | திட்ட வரைவு தயார்நிலையில் | 8 திட்டங்கள் முன்னேற்ற நிலையில் | 30 |
| மாத்தறை | திட்ட வரைவு தயார்நிலையில் | 7 திட்டங்கள் முன்னேற்ற நிலையில் | 80 |
| ஹம்பாந்தோட்டை | திட்ட வரைவு தயார்நிலையில் | 7 திட்டங்கள் முன்னேற்ற நிலையில் | 44 |
| இரத்தினபுரி | முன்னேற்ற நிலையில் | ஆரம்பிக்கப்படவில்லை | ஆரம்பிக்கப்படவில்லை |

## 4.3 2007 ம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டம்

2007ம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

1. 2006ல் துவங்கப்பட்ட மாவட்ட முன்னாயத்தத் திட்டங்களை நிறைவு செய்வதும் 18 மாவட்டங்களுக்கான திட்டங்களை தாயார் செய்தலும்
2. 2006ல் துவங்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவு மட்ட முன்னாயத்தத் திட்டங்களை நிறைவு செய்வதும் ஏனைய 75 புதிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான திட்டங்களை தாயார் செய்தலும்
3. தெரிவு செய்யப்பட்ட கிராம சேவையாளர் பிரவுகளுக்கான முன்னாயத்தத் திட்டங்களை தயார் செய்தல்.
4. ஐந்து மாகாணங்களுக்கான இடர் முன்னாயத்தத் திட்டங்களை தாயார் செய்தல்

பிரிவு 5

## 5. அவசரகால நடவடிக்கை நிலையம்

அவசரகால நிலைமைகளின் போது தகவல்களை சேகரித்து அதனை தொகுத்தலும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக அவசியமான நடவடிக்கை மற்றும் நிவாரண உதவிகளை வழங்குவதும், மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதும் அவசரகால நடவடிக்கை நிலையத்தின் செயற்பாடுகளாகும்.

பின்வருவன அவசரகால நடவடிக்கை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட / ஒருங்கிணைக்கப்பட்ட சில செயற்பாடுகளாகும்.

- கேகாலை மாவட்டத்தில் பம்பேகம தோட்டத்தில் ஏற்பட்ட குழப்பநிலை இனக்கலவரமாக மாற்றமடையாமல் தடுப்பதற்கு மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளருடன் இணைந்து அவசரகால நடவடிக்கை நிலையத்தின் அதிகாரி ஒருவரும் ஈடுபட்டார். 2006 ஜூன் மாதம் 29ம் திகதி மேற்படி அதிகாரி குறிப்பிட்ட தோட்டத்திற்கு விஜயம் செய்து சமாதானக் குழுவொன்றை அமைத்ததன் மூலம் நிலைமையை வழமைக்கு கொண்டுவந்தார். இவ்விஜயத்தின் போது சப்ரகமுவ மாகாண முதலமைச்சர், ஏனைய அரசியற்கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் பலரை இடர்முகாமைத்துவ அதிகாரிகள் சந்தித்தனர்.

- மத்தி மாகாணத்தில் ஜூலை 2006ல் ஏற்பட்ட அதிவேகக் காற்றின் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களுக்கு கூரைத்தகடுகள் விநியோகிக்கப்பட்டன. புலம்பெயர்வதற்கான சர்வதேச நிறுவனத்தினால் இவை அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

- 2006 ஆகஸ்ட்- செப்டம்பர் மாதங்களில், திருக்கோணமலை மாவட்ட கந்தளாய் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதில், புத்தளம் மற்றும் களுத்துறை மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

  இவர்களின் இந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக அவசரகால நடவடிக்கை நிலைய அதிகாரி ஒருவர் கந்தளாய்க்கு விஜயம் செய்தார்.

- 2006 செப்டம்பர் 29ம் திகதி காலி மாவட்ட கொக்கலை- ஹபராதுவ கடலில் வங்காளதேசத்திற்குச் சொந்தமான எண்ணெய்த் தாங்கிக் கப்பல் மூழ்கியது. காலி மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு அவ்விடத்தில் தற்காலிக நடவடிக்கை நிலையமொன்றை ஆரம்பித்ததோடு, எண்ணெய் கசிவினால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்காக அதனை அகற்றும் பணியிலும் ஈடுபட்டது.

- 2006 ஒக்டோபர் மாத வெள்ளப் பெருக்கின் போது அவசரகால நடவடிக்கை நிலையம், முழு (24 மணி) நேரமும் செயற்பட துவங்கியது. களனி ஆற்றின் நீர் மட்டம் மற்றும் நாட்டின் பரந்த காலநிலை நிலைமை அவதானிக்கப்பட்டு வந்ததோடு, தகவல்கள் சேகரிக்கப்பட்டு பொது மக்களை அறிவூட்டுவதற்காக தொடர்பு சாதன ஊடகங்களுக்கு வழங்கப்பட்டன. நிவாரண உதவிகளுக்காக மாவட்ட செயலாளர்களுடன், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஒருங்கிணைப்புச் செய்தல் என்பனவும் அவசரகால நடவடிக்கை நிலையத்தினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

- தும்மோதர – களனியில் மேற்கொள்ளப்படும் ‘சேபால’ ஓடையை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை பார்வையிட்டு கௌரவ இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக அவசரகால நடடிவடிக்கை நிலையத்தின் அதிகாரி ஒருவர் 2006 நவம்பர் மாதம் 13ம் திகதி அவ்விடத்திற்கு விஜயம் செய்தார். ‘சேபால’ ஓடையின் சுத்தப்படுத்தல் நடவடிக்கையின் சரியான நிலவரத்தை அறிந்து கொள்வதே இவ்விஜயத்தின் நோக்கமாகவிருந்தது. (களனி பிரதேச சபை அங்கத்தவர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே இது மேற்கொள்ளப்பட்டது)

- கம்பாஹா, கொழும்பு, களுத்துறை, அம்பாறை, மற்றும் ஹம்பாந்தோட்டை அகிய மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது, மாவட்ட / பிரதேச செயலாளர்களுடனும், ஏனைய அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் எல்லா செயற்பாட்டு நடவடிக்கைகளையும் நிவாரண உதவிகளையும் அவசரகால நடவடிக்கை நிலையம் ஒருங்கிணைப்புச் செய்தது.

- இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்தவர்களின் நிலைமைகள் எல்லா மாவட்ட செயலாளர்களினதும் பங்களிப்புடன் அவசரகால நடவடிக்கை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், நிவாரண உதவிகள் தொடர்பாக, பாதிக்கப்பட்ட மக்களினால் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகள் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

- டயலொக் ரெலிகொம் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகால முன்னெச்சரிக்கை வலையமைப்பு தொடர்பான ஒருங்கிணைப்பை மேற்கொண்டதோடு அதற்கான பயிற்சிப்பட்டறை ஒன்றையும் நவம்பர் மாதத்தில் மேற்கொண்டது.

- அவசரகால நடவடிக்கை நிலையத்தில் பொதுமக்களுக்கான எச்சரிக்கை கட்டுப்பாட்டு தொகுதியொன்று உருவாக்கப்பட்டது. இதன் கம்பங்கள் ஹிக்கடுவை மற்றும் கல்முனையில் அமைக்கப்பட்டுள்ளன.

- அவசரகால நடவடிக்கை நிலையத்திற்கு அவசியாமன தளபாடங்கள், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் அவசரகால நடவடிக்கை நிலையத்திற்கு அவசியமான ஏனைய உபகரணங்களை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் வழங்கியது. எதிர்வரும் காலங்களில் அவசரகால நடவடிக்கை நிலையம் அதன் யெற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ளும்.

அவசரகால நிலைமைகளின் போது, 2670002 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் 2679979 என்ற தொலை நகல் இலக்கத்தின் ஊடாகவும் அவசரகால நடவடிக்கை நிலைத்துடன் தொடர்புகொள்ளலாம்.

## எதிர்கால திட்டங்கள்

- மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பதிகாரிகளின் உதவியுடன் மாவட்ட மட்ட பிரதான நிறுவனங்களின் தொடர்புத் தகவல்களை சேகரித்தல்.
- மாவட்ட மட்டத்திற் காணப்படுகின்ற வளங்கள் (மனித மற்றும் பொறிகள்) தொடர்பான தகவல் சேகரித்து அது தொடர்பான தகவல் தளத்தை உருவாக்குதல்
- மாவட்ட மட்ட அவசரகால நடவடிக்கை நிலையங்களை உருவாக்குதல்
- மாவட்டங்களில் கண்டறியப்பட்ட இடங்களில் முன்னெச்சரிக்கை கம்பங்களை நிறுவுதல்.

பிரிவு 6

## 6. பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான அறிவூட்டல்

மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்புப் பிரிவின் ஊழியர்கள், சமூக மட்டத்தில் வேலை செய்வதை இலகுவாக்குவதற்காக இடர் முகாமைத்துவ அனுகுமுறைகள், பங்குபற்றலுடனான அனுகுமுறைகள் தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். (சராசரியாக 240 பேர்)

சமூக மட்டத்தில் சுனாமி அனர்த்தத்திற்கான வெளியேற்ற நெட்டுருப்பயிற்சிகள் தொடர்பாகவும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். மாதிரி நெட்டுரப்பயிற்சியொன்று தொகுக்கப்பட்டு வீடியோ ஒளி நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய இணைப்புப்பிரிவுகள் செயற்படும் எல்லா கரையோர மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பங்காளிகளுடன் சிறப்பான தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் அதனை விருத்தி செய்வதற்காக, ஐக்கிய நாடுகள் தொண்டர்களுக்கும், மாவட்ட இணைப்பாளர்களுக்கும் உதவி இணைப்பாளர்களுக்கும் தொடர்பாடல் ஆற்றல் விருத்திப் பயிற்சி வழங்கப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களில் பல்வேறுபட்ட அறிவூட்டல் நிகழ்ச்சிகளில் வளவாளர்களாக பங்குபற்றி பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கான மாதிரி அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று (சாரசரியாக 300 பேர்) கௌரவ ஆளுனர் அவர்களின் ஆதரவுடன் நடாத்தப்பட்டது. இது எல்லா மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்படும்.

காலி மாவட்டத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கான (சராசரி 40 பேர்) அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்று மாதிரி நிகழ்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இது ஏனைய எல்லா மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும்.

இரத்தினபுரியில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து சமூகங்களில் மண்சரிவுக்கான முன்னறிவிப்பிற்கு துலங்களை மேற்கொள்வது தொடர்பாக சமூக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அவர்களின் பரந்த வலையமைப்பை பயன்படுத்தி கிராமிய மட்டத்தில் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சமுர்தி என்பவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

பாடசாலை முன்னாயத்தம் மற்றம் வீட்டு முதலுதவி ஆகிய இரண்டு கைந்நூல்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. அவை தற்போது அச்சிடப்பட்டு விநியோகிப்பதற்காக தயார்செய்யப்பட்டுவருகின்றது.

சுனாமி, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, மின்னல் மற்றும் சூறாவளி என்பன தொடர்பான அறிவூட்டலை மேற்கொள்வதற்காக ஐந்து சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

டிசம்பர் 26ம் திகதியில் கொண்டாடப்பட்ட தேசிய பாதுகாப்பு தினைத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கான பரந்த அறிவூட்டல் செயற்பாடொன்று (ஒக்தோபர் முதல் டிசம்பர் வரை) மேற்கொள்ளப்பட்டது. இதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

உலக இடர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஒருபக்க பத்திரிகை அனுபந்தமொன்று தயாரிக்கப்பட்டு வழிகாட்டப்பட்டது. (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணை)

'பிரக்டிகல் எக்சன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான முழுப்பக்க அறிவூட்டல் இணைப்பொன்று (நிறம்) எட்டு வாரங்களாக வெளியிடப்பட்டது. இது தற்போது கைநூலொன்றாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

சுயாதீன தொலைக்காட்சியின் 'பகன்தொர' எனப்படும் காலை நிகழ்ச்சியில் இடர் முகாமைத்துவம் தொடர்பான 20 நிமிட எட்டு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணை)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காலைச் செய்தி அறிக்கையில் 2 நிமிட இடர் முகாமைத்துவ தகவல்கள் பதினான்கு முறை ஒலிபரப்பப்பட்டது. (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணை)

தேசிய பாதுகாப்புத் தினத்திற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இலவச பங்களிப்புடன், 30 நிமிட வானொலிக் கலந்துரையாடல்கள் 'சுபாரதீ' நிகழ்ச்சி மூலம் நான்கு முறை மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் பாடசாலை மாணவ மாணவிகளை இலக்காகக் கொண்டு 20 நிமிட வானொலிக் கலந்துரையாடல்கள் எட்டு மேற்கொள்ளப்பட்டன. (ஜி ரி சட் அனுசரணை)

நாடலாவிய கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடாத்தப்பட்டு தேசிய பாதுகாப்பு தினத்தின் போது வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற கட்டுரைகள், ஓவியங்கள் மற்றும் வானொலிக் கலந்துரையாடல்கள் என்பன புத்தகங்களாக அச்சிடப்பட்டுள்ளதோடு அவை இருவெட்டுக்களாகவும் பதியப்பட்டுள்ளன. (ஜி ரி சட் அனுசரணை)

தேசிய பாதுகாப்பு தின கொண்டாட்ட நிகழ்வுகள் சுயாதீன தொலைக்காட்சியினூடாகவும் 'லக்ஹன்ட' வானொலி மூலமும் நேரடியாக ஒளி மற்றும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணை)

